

கழக தலைவர் முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான சிறப்பான திராவிட மாடல் ஆட்சியை ஏற்று விழுப்புரம் தெற்கு மாவட்டம், திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதி, திருக்கோவிலூர் அ.தி.மு.க வை சேர்ந்த 27 வது வார்டு துணைச் செயலாளர் ராக்கி தலைமையில் வெற்றி திருக்கோவிலூர் நகர அம்மா பேரவை, நகர தகவல் தொழில்நுட்ப அணி சேர்ந்த ஆசைமணி மற்றும் சூர்யா உட்பட்ட சேர்ந்த 60 நபர்கள் விழுப்புரம் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி முன்னிலையில் தங்களை கழகத்தில் இணைத்து கொண்டார்கள்.மாவட்ட துணை செயலாளர் டி.என்.முருகன், நகர செயலாளர் R.கோபிகிருஷ்ணன், நகர மன்ற துணை தலைவர் T.குணா, நகர இளைஞர் அணி அமைப்பாளர் நவநீதகிருஷ்ணன், நகர மாணவர் அணி அமைப்பாளர் ஸ்டான்லி செல்வா, குகேஷ், மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### சிவகங்கையில் மாவட்ட முன்னாள் தி.மு.க. துணை செயலாளர்

# கே.எஸ்.எம்.மணிமுத்து ஓராண்டு நினைவு நாள்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் – மு.தென்னவன் – கழகத்தினர் நினைவஞ்சலி!

சிவகங்கை, ஆக.19- சிவகங்கை மாவட்ட கழக முன்னாள் துணை செயலாளர், காஞ்சிரங்கால் ஊராட்சி மன்ற தலைவர், சிவகங்கை நகர்மன்ற துணைத் தலைவர், மாவட்ட திட்டக்குழு உறுப்பினராக இருந்தவர் கே.எஸ்.எம்.மணிமுத்து இவர் கடந்தாண்டு 2024 ஆகஸ்ட் 15ஆம் தேதி சிவகங்கையில் இயற்கை யெய்தினார். அவரது நினைவினை போற்றும் வகையில் 15ம்தேதி அன்று சிவகங்கை மாவட்ட தி.மு.க. சார்பிலும் மணிமுத்து குடும்பத்தார் சார்பிலும் ஓராண்டு நினைவஞ்சலி கூட்டம் மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் மணிமுத்துவின் திருஉருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். அவரை தொடர்ந்து முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், மணிமுத்து மனைவி மலர்விழி, மகள்கள் ரெசினா பானு, நமுனப்ரியா, மருமகன் பிரபு பிறைசூடன் , கொத்தமங்கலம் சேது உட்பட மணிமுத்து குடும்பத்தினர் மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். அதை தொடர்ந்து நினைவேந்தல் நிகழ்ச்சி அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் நடைபெற்றது. அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் மணி முத்துவிற்கு புகழாரம் சூட்டி சிறப்புரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், மாவட்ட அவை தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன், மாவட்ட கழக துணைச் செயலாளர்கள் த.சேங்கைமாறன், திருமதி ஜோன்ஸ் ருசோ, நகர் கழகச் செயலாளர்கள் சி.எம்.துரை.ஆனந்த், க. பொன்னுச்சாமி, ஒன்றிய செயலாளர்கள் திருமலை முத்துராமலிங்கம், நா. நெடுஞ்செழியன், மா.அண்ணாத்துரை, மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன், மாவட்ட ஆதிராவிடர் குழு தலைவர் கொத்தமங்கலம் சேது, அமைப்பாளர் சிங்கமுத்து, முன்னாள் எம்.எல்.ஏ. எஸ்.மாரியப்பன் கென்னடி, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ்குமார், மாநில கொள்கை பரப்பு இணைச் செயலாளர் தமிழ் பிரியா, வழக்கறிஞர்கள் ஆதி.அழகர் சாமி, துஷாந்த் பிரதீப் குமார், திராவிட கழகம் வழக்கறிஞர் எஸ்.இன்பலாதன், முன்னாள் மாவட்ட காங்கிரஸ் தலைவர் எம். ராஜரத்தினம், விடுதலைச் சிறுத்தைகள் மலைச்சாமி ஆகியோர் நினைவஞ்சலி செலுத்தினார்கள் . ஓய்வு பெற்ற துணை வட்டாட்சியர் காடனேரி புஷ்பவல்லி கவிதை வாசித்தார் .இந்த நினைவேந்தல் நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் எம். ஜெயராமன் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே. எஸ்.நாராயணன், தொ.மு.ச. முருகேசன், வழக்கறிஞர் வினோத், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் எஸ். பாஸ்கரன், ஆர்.பிரபாகரன், சார்பு அணி நிர்வாகிகள் சேவியர் ,ஆர். கோதண்டபானி, சுப. ஜெயகுமார், ருக்மா சரவணன், ஒய்கா.சோமு, அண்ணாமலை, மகளீரணி மஞ்சுளா, மார்கரெட் கமலா, ராஜேஸ்வரி, ஒன்றிய துணைச் செயலாளர் எஸ். முத்துக்குமார் உட்பட மாவட்டம் முழுவதிலுமிருந்து கழக நிர்வாகிகள், சார்புஅணி நிர்வாகிகள், மணிமுத்துவின் குடும்பத்தினர் கலந்து கொண்டார்கள்.

நிகழ்ச்சியில் மாவட்ட கழகத்தின் சார்பில் நலிவுற்ற 100 நபர்களுக்கு வேட்டி சேலைகளை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன், மு.தென்னவன், திருமதி மலர்விழி மணி முத்து ஆகியோர் வழங்கினார்கள். மாவட்ட செய்தி தொடர்பாளர் அ.அயூப் கான் நிகழ்ச்சியினை தொகுத்து வழங்கினார். திருமதி ரெசினாபானு நன்றி கூறினார்.

### திருப்பத்தூர் ஒன்றியத்தில்

# ரூ.42.47 இலட்சம் மதிப்பிலான மேம்பாட்டுப் பணிகள்!

## அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

திருப்பத்தூர், ஆக.19- எல்லோர்க்கும் எல்லாம் என்ற திராவிட மாடல் ஆட்சியில்முதலமைச்சர் அவர்கள் தலைமையில் தமிழ்நாடு முழுவதும் வளர்ச்சிப் பணிகள் அனைத்துத் துறைகள் வாயிலாக மக்கள் போற்றும் வகையில் நடைபெற்று வருகின்றன.

பொதுப்பணி நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு வழிகாட்டுதலில் திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதியில் சட்டமன்ற உறுப்பினர் A.நல்லதம்பி, குரும்பகேரிபுதூர் ஊராட்சியில் ரூ.6.47இலட்சம் மதிப்பீட்டில் தொகுதி மேம்பாட்டு நிதியின் வாயிலாக பேவர் பிளாக் தரைதளம், முதல்வரின் கிராம சாலைகள் விரிவாக்க திட்டத்தின் வாயிலாக தார்சாலை

ஜலகம்பாறை சாலை முதல் ஆண்டி வட்டம் வரை 23 இலட்சம் மதிப்பீட்டிலும்,

மகாத்மா காந்தி தேசிய ஊரக வளர்ச்சித்திட்டத்தின் வாயிலாக 13 லட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட நியாய விலைக் கடை ஆக மொத்தம் 42.47 லட்சம் மதிப்பீட்டிலான வளர்ச்சிப் பணிகளை தொடங்கியும் புதிய கட்டிடத்தினை திறந்தும் வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் ஒன்றியக்குழு தலைவர்.விஜயா அருணாசலம், துணை சேர்மென்.டி.ஆர்.ஞானசேகரன், ஒன்றிய கழக பொறுப்பாளர்.எம். ராஜேந்திரன், பி.ஆர்.சின்னபையன், வி.அன்பழகன்,எல்.சிவலிங்கம், டி. கே.சின்னதம்பி, ஒன்றியக் குழு உறுப்பினர். அமலோற்பவம்தோமினிக், ஊராட்சிமன்ற தலைவர். ஸ்டெல்லாதேவசகாயம், மற்றும் வார்டு உறுப்பினர்கள், கிளை செயலாளர்கள் மற்றும் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் திரளாக கலந்து கொண்டனர்.



விழுப்புரம் சட்டமன்ற தொகுதி, கண்டமானடி ஊராட்சியில் நடைபெற்ற கிராமசபை கூட்டத்தில் விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இலட்சுமணன் விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான் கலந்துகொண்டு சிறப்புரையாற்றி, பொதுமக்களின் கோரிக்கைகளை கேட்டறிந்தார்கள். ஊராட்சி மன்ற தலைவர் வீரா.ஏழுமலை, மாவட்ட வருவாய் அலுவலர், வட்டார வளர்ச்சி அலுவலர், ஒன்றிய கழக செயலாளர் தே.முருகவேல், கோலியனூர் ஒன்றிய குழு பெருந்தலைவர் E.சச்சிதானந்தம், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் புகழ் செல்வக்குமார் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



கடலூர் மாவட்டம் ,நெய்வேலி என்.எல்.சி இந்தியா நிறுவனத்தில் 79 ஆவது சுதந்திர தின விழா நடைபெற்றது. என்.எல்.சி. தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர் பிரசன்ன குமார் மோட்டு பள்ளி அவர்கள் தேசிய கொடியை ஏற்றி வைத்து அணி வகுப்பு மரியாதையை ஏற்று கொண்டார். மூத்த தொழிலாளர்கள் கௌரவிக்கப்பட்டனர். மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பு அம்சங்களுடன் கூடிய இருசக்கர வாகனம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வுகளில் நிறுவன இயக்குனர்கள் சுரேஷ் சந்திர சுமன், சமீர் ஸ்வரூப், எம் .வெங்கடாசலம், கண்காணிப்பு துறை தலைமை அதிகாரி அய்யா கண்ணு கோவிந்தராஜன், தொ.மு.ச தலைவர் ஞா.ஞான ஒளி பொதுச் செயலாளர் வீ. குருநாதன் பொருளாளர் அ.அப்துல் மஜீத் அலுவலக செயலாளர் இரா சீனிவாசன் மற்றும் அனைத்து தொழிற்சங்க நிர்வாகிகள் அதிகாரிகள் ,பள்ளி மாணவர்கள் கலந்து கொண்டனர்.



இராணிப்பேட்டை மாவட்டம் மேல் விஷாரம் நகர துணை செயலாளர் வீ.பூபாலன் அவர்கள் இயற்கை எய்தினார். இதையடுத்து அவரது உடலுக்கு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் இராணிப்பேட்டை மாவட்ட கழக செயலாளர் ஆர்.காந்தி மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார் .இதில் நகர செயலாளர் இமாயூன்,நகராட்சிதலைவர் குல்சார் அகமது மற்றும் நகர மன்ற உறுப்பினர்கள் கழகத்தினர் ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### ஒன்றிய பெருந்தலைவர் சொக்கலிங்கம் தலைமை!

# ஒலக்கூர் ஒன்றியம் - ஆவணிப்பூரில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருட்களை வழங்கினார்!

திண்டிவனம், ஆக.19- தமிழ்நாடு அரசின் சேவைகள் பொதுமக்களை விரைவாகவும் எளிதாகவும் சென்று சேர்ந்திடும் வகையில் செயல்படுத்தப்பட்டுள்ள உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் கடந்த 15 ஆம் தேதி சிதம்பரத்தில் தொடங்கி வைத்தார் இதை அடுத்து விழுப்புரம் மாவட்டம் ஒலக்கூர் ஒன்றியம் ஆவணிப்பூர் ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்டம் முகாம் நடைபெற்றது.

ஒலக்கூர் ஒன்றிய பெருந்தலைவர் சொக்கலிங்கம், ஒன்றிய துணை சேர்மன் ராஜாராமன் ஆகியோர் கலந்து கொண்டு ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாமை தொடங்கி வைத்தனர். தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் காரல் மார்க்ஸ் முன்னிலை வகித்தார் .வட்டார வளர்ச்சி அலுவலர் சரவண குமார் அனைவரையும் வரவேற்றார்.

உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் ஆவணிப்பூர், கடவம்பாக்கம், அன்னம்பாக்கம், பனையூர், பாங்கொளத்தூர் ஆகியகிராமத்திலிருந்து ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டுஇலவச வீட்டு மனை பட்டா, குடும்ப அட்டை, முதியோர் ஒய்வூதியம் கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தில் பயன் பெறுவதற்கு மனு அளித்தனர்.

இதையடுத்து முன்னாள் அமைச்சரும் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் ஆவணிப்பூரில் நடைபெற்ற ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாமை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது பொதுமக்களிடம் இருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்கள் விவரம் குறித்து துறை சார்ந்த அதிகாரிகளிடம் கேட்டறிந்த முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ முகாமில் வேளாண்மை மற்றும் தோட்டக்கலை துறை சார்பில் விவசாயிகளுக்கு வேளாண் இடு பொருட்கள் மற்றும் விதைகளை வழங்கினார்.

தொடர்ந்து உடல்நலம் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் ஒலக்கூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் புருஷோத்தமனை விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ நேரில் சென்று சந்தித்து உடல் நலம் குறித்து கேட்டறிந்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், ஒலக்கூர் மேற்கு ஒன்றிய அவைத்தலைவர் அமராவதி, ஒன்றிய கவுன்சிலர்கள் சித்ரா, ஜனார்த்தனன், விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் செந்தில் முருகன், உதயகுமார், ஊராட்சி மன்ற தலைவர்கள் அசோகன், தெய்வானை, மல்லிகா, ஜெயகிருஷ்ணன், கன்னியம்மாள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

வட்டார வளர்ச்சி அலுவலர் உதயகுமார் அனைவருக்கும் நன்றி கூறினார்.

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட

# ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நடைபெற்றது!

நாகர்கோவில், ஆக.19- கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டமானது மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நாகர்கோவில், ஒழுகினசேரியில் அமைந்துள்ள மாவட்ட தலைமை கழக அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது.

கூட்டத்தில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் “ஒரணியில் தமிழ்நாடு”என்ற முன்னெடுப்பில் நடைபெற்று கொண்டிருக்கின்ற உறுப்பினர் சேர்க்கை பணியின் போது பொதுமக்களின் ஒவ்வொரு இல்லங்களுக்கும் நேரில் சென்று கழக அரசின் நான்காண்டு சாதனைகளை எடுத்துக் கூறி உறுப்பினர் சேர்க்கை பணியின் இலக்கினை விரைந்து முடிப்பது தொடர்பாக ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

கூட்டத்தில் ஒன்றிய கழக செயலாளர்கள் பா. பாபு, த.செல்வன், ஏ.சுரேந்திரகுமார், ஒன்றிய கழக பொருப்பாளர்கள் ச.சுந்தர் சிங், ஜெ.மிலன், நகர கழக செயலாளர்கள் என்.நாகூர் கான், குமரி ஸ்டீபன், பகுதி கழக செயலாளர்கள் இ.ஜவகர், என்.பி.துரை, எம்.சேக்மீரான், பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்களின் பொறுப்பாளர்கள் ஐ.குமரி மணிமாறன், ஜெமிலா ஆன்டனி ஆகியோர் கலந்து கொண்டனர்.



வேலூர் மாவட்ட கழக, மாநகர, ஒன்றிய,நகர, பேரூர் கழக பொறியாளர் அணி அமைப்பாளர் துணை அமைப்பாளர்களுக்கான நேர்காணல் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடந்தது. கூட்டத்திற்கு மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.ஆர்.அசோக் தலைமை தாங்கினார். மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் சி.பிரதீப் அனைத்து நிர்வாகிகளையும் நேர்காணல் நடத்தினார். சிறப்பு அழைப்பாளராக மாவட்ட கழக அவைத்தலைவர் தி.அ. முகமதுசகி கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினார். முடிவில் மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் கார்த்திகேயன் நன்றி கூறினார்.



திருப்பத்தூர் ஒன்றியம் குரும்பகேரி புதூரில் தேசிய ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட நியாய விலைக் கடையை ஒன்றிய செயலாளர் அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்.